**O.S. No.202/2018**
**P.W.1 - திரு. ஜம்புலிங்கம்**
**நாள் : 25.02.2026.**

**<u>4 மற்றும் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலங்களில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எனக்கு 1986ம் வருடம் திருமணம் நடைபெற்றது. நான் திருமணத்தின் போது மதுரையில் இருந்து வந்தேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அழகர்சாமி எப்போது இறந்தார் என்றால் எனது திருமணத்திற்கு முன்பே இறந்துவிட்டார். மேற்படி அழகர்சாமி இறந்து எத்தனை வருடங்களுக்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், எனக்கு தெரியாது. என் மனைவி காலமாகிவிட்டார், தேதி, வருடம், மாதம் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி அழகர்சாமியின் வாரிசுகள் கூட்டாக தாவா சொத்துக்களை அனுபவித்து செய்து வந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வாதிகள்,பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்தது சம்மந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பொறுத்து சிவபிரகாஷ் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த போது ஆட்சேபணை செய்தீர்களா என்றால், அந்த விபரம் எங்களுக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களை சிவபிரகாஷ், 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த போது நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால், அந்த விபரம் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்துக்களை பொறுத்து நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. மேற்படி மூன்று கிரையங்களும் எனக்கு எப்போது தெரிய வந்தது என்ற விபரத்தை என்னுடைய பிராதிலோ அல்லது நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மேற்படி மூன்று கிரைய பத்திரங்களை ரத்து செய்வதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், என் வாரிசுகளும், எந்த தேதியில் 3ம் பிரதிவாதி அணுகி பாகபிரிவினை கோரினோம் என்று பிராதிலோ,

நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பெயரிலும், 4ம் பிரதிவாதியின் கணவர் சுப்பாராஜ் பெயரிலும் ஏற்பட்ட கூட்டுப்பட்டாவை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என் மனைவி உயிரோடு இருந்த காலம் வரை மேற்படி கூட்டு பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி அழகர்சாமி இறந்து பின்னர் குடும்பத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன் அடிப்படையில் 3ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரர் சுப்பாராஜ்க்கும் தாவா சொத்துக்கள் பாகமாக கொடுக்கப்பட்டு அவர்கள் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டு அனுபவித்து வந்து விபரம் என் மனைவிக்கு தெரிந்ததால் தான் அவர் உயிரோடு இருக்கும் போது கூட்டு பட்டாவை ரத்து செய்யவோ, பாகப்பிரிவினை வழக்கு தொடுக்கவில்லை என்றால், சரியல்ல. என் மனைவி உயிரோடு இருக்கும் வரை வழக்கை தாக்கல் செய்யாமல் அவர் இறந்த பின்னர் இந்த பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருணம் ஆனது முதல் மதுரையில் குடியிருந்து வந்ததால் எனக்கும் தாவா சொத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.25 16:46:53 +0530